# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | C.C. No.207 /2016 |
| preliminary Register | : | |
| Sessions | : | |
| DEPOSITION OF WITNESS for Court | Petitioner Respondent | அ.சா.1 |
| Name : | | திருமதி.சோபனா |
| Father's/Husband Name: | | திரு.சீனிவாசன் |
| Village : | | பழைய அரசமங்கலம் |
| Taluk : | | குன்னம் |
| Age : | | 30 /2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 07.12.2023.

**(1ம் எதிரி ஆஜர். 2,3 எதிரிகள் ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை :–**

01. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் மேலாளராக இருக்கிறேன். ஆஜர் 1ம் எதிரி என் கணவர். 2ம் எதிரி என் மாமனார். 3ம் எதிரி என் மாமியார். 08.06.2006ம் தேதி எனக்கும் 1ம் எதிரிக்கும் திருமணம் நடந்தது. அப்போது எனக்கு வயது 15. என் கணவருக்கு 27 வயது. ஒரு மாதத்தில் நான் கர்ப்பமாகிவிட்டேன். அதனால் எனக்கு உடல்நிலை சரியில்லாமல் போய்விட்டது. என் கணவரின் அண்ணன் மனைவி காட்டில் வேலை செய்தது போல் என்னால் வேலை செய்யமுடியவில்லை என்பதால் என் மாமியார் தான் முதலில் பிரச்சனை செய்தார். மோசமான வார்த்தைகளால் என்னை திட்டி, என் கணவர் அம்மி கல்லை தூக்க என் மீது போட வந்துவிட்டார். அக்கம், பக்கத்தில் இருந்தவர்கள் எங்களை சமாதானப்படுத்தி குழந்தை பிறக்கும் வரை என்னை என் அம்மா வீட்டில் இருக்க சொன்னார்கள்.

02. குழந்தை பிறந்து ஒரு மாதம் கழித்து என் கணவர் வந்து என்னை அழைத்து வந்துவிட்டார். நான் அங்கு இரண்டு மாதம் இருந்தேன். பிறகு என் கணவர் துபாய்

சென்றுவிட்டார். நான் வீட்டு வேலை மற்றும் காட்டு வேலை செய்து கொண்டு இருந்தேன். நான் குழந்தைக்கு பால் கொடுக்கும் போது புடவையை சரிசெய்யும் போது என் மாமனார் தவறான கண்ணோட்டத்தில் என்னை பார்த்தார். வீட்டில் ஏதாவது சண்டை நடந்தால் தேவையில்லாமல் என் மாமனார் என்னை தொடுவார். இதைப்பற்றி என் கணவரிடம் போனில் கூறினேன். ஆனால் அதை அவர் கொஞ்சம் கூட பொருட்படுத்தவில்லை.

03. என் வெளிநாட்டில் இருந்து வந்ததற்கு பிறகு எனக்கும் என் கணவருக்கும் சண்டை நடந்தது, அதற்கு முழு காரணம் என் மாமனார் தான். சண்டை பெரிதாகிவிட்டது. நான் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என் கணவர் மீண்டும் வெளிநாடு செல்ல வேண்டும் என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யக்கூடாது என்பதற்காக சமாதானப்படுத்தி வழக்கு பதிவு செய்யவிடாமல் தடுத்துவிட்டார்கள். நான் என் கணவருடன் வாழ்ந்த இரண்டு மாதத்தில் என் கணவர் எனக்கு பாலியல் ரீதியாக தொல்லை கொடுத்தார். மீண்டும் நான் கர்ப்பமானேன். உடனே நான் என் அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டேன்.

04. என் அம்மா தான் பிரசவம் பார்த்தார். மீண்டும் என் கணவர் வெளிநாடு சென்றுவிட்டார். இரண்டாவது ஆண் குழந்தை பிறக்கும் என்று என் கணவர் நினைத்தார். ஆனால் பெண் குழந்தை தான் பிறந்தது. எனவே என் கணவர் விவகாரத்து செய்ய வேண்டும் என்பதற்காக பச்சை நிற தாளில் அவரே டைப் செய்து எடுத்து வந்து என்னிடம் கையொப்பம் கேட்டார். நான் முடியாது என்று சொல்லி சண்டை நடந்தது.

05. அடிதாங்க முடியாமல் அந்த பேப்பரை எடுத்துக்கொண்டு என் குழந்தைகளை அழைத்துக்கொண்டு என் அம்மா வீட்டிற்கு வந்துவிட்டேன். இரண்டாவது குழந்தைக்கு 1 ½ வயது ஆகும் வரை என்னுடன் தான் இருந்தது. அதன் பிறகு என் மாமனார், மாமியார், அக்கம் பக்கத்தில் உள்ளவர்களை அழைத்து வந்து இரண்டு குழந்தைகளையும் அழைத்து சென்றுவிட்டார்கள். நான் சண்டைப்போட்டு என் குழந்தைகளை அழைத்த வந்து லப்பைக்குடிகாட்டில் உள்ள பள்ளியில் சேர்த்தேன். ஆனால் அவர்கள் மறுபடியும் அழைத்து சென்று வேறு பள்ளியில் சேர்த்தார்கள். அதனால் என் குழந்தைகளின் கல்வி பாதிக்கப்பட்டது.

06. என் கணவர் என்னிடம் விவகாரத்து கேட்டு வழக்கு தாக்கல் செய்துவிட்டார். நான்

ஒத்துக்கொள்ளவில்லை என்பதால் சேர்ந்து வாழ வேண்டும் என்று தீர்ப்பு வந்தது. என் கணவர் முருகன்குடியில் உள்ள ரஞ்சிதா த/பெ. ராஜா என்ற பெண்ணை 02.01.2016 ம் தேதி திருமணம் செய்துக்கொண்டார். அதன் பிறகு தான் நான் புகார் அளித்தேன். தற்போது இரண்டு ஆண்பிள்ளைகளும், ஒரு பெண் பிள்ளைகளும் உள்ளது. என்னிடம் காட்டப்படும் புகார் நான் அளித்தது தான். ( **அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும்**). போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**1,2,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை இல்லை என்று பிரதிநிதிதுவம் செய்ததை பதிவு செய்யப்பட்டது.

Typed to my dictation in open court in
the presence of Witness and read over
to the witness and admitted by the
witness to be correct.
Sd/-...

Judicial Magistrate
Additional Mahila Court,
Perambalur.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

-----

**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | C.C. No.207 /2016 |
| preliminary Register | : | |
| Sessions | : | |
| DEPOSITION OF WITNESS for Court | Petitioner Respondent | அ.சா.2 |
| Name : | | திருமதி.காஞ்சனா |
| Father's/Husband Name: | | திரு.சதீஸ்குமார் |
| Village : | | அணைக்கரை |
| Taluk : | | காட்டுமன்னார்கோவில்(கடலூர்) |
| Age : | | 28 /2023 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 07.12.2023.

**(1ம் எதிரி ஆஜர். 2,3 எதிரிகள் ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை :–**

01. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் குடும்ப தலைவியாக இருக்கிறேன். அ.சா.1 எனது அக்கா. என் அக்காவிற்கு 9ம் வகுப்பு முடிந்தவுடன் திருமணம் ஆகிவிட்டது. என் அக்கா கர்ப்பமானவுடனே பிரச்சனை ஆரம்பித்துவிட்டது. என் அக்காவை அவர் கணவர் பயங்கரமாக போட்டு அடிப்பார். குழந்தை பிறந்து ஒரு மாதம் தான் எங்கள் வீட்டில் இருந்தார். உடனே வந்து அழைத்து சென்றுவிட்டார். அக்காவின் கணவர் வெளிநாடு சென்றுவிட்டார்.

02. என் அக்காவின் மாமனார், மாமியார் என் அக்காவை காட்டு வேலை செய்ய சொல்லி டார்ச்சர் செய்தார். டார்ச்சர் தாங்கமுடியாமல் அக்கா எங்கள் வீட்டிற்கு வந்துவிட்டார். சமாதானப்படுத்தி மீண்டும் அழைத்து சென்றார்கள். ஆனால் பிரச்சனை சரியாகவில்லை. 3 வருடம் கழித்து இரண்டாவது முறையாக கர்ப்பமானார். 2011ல் இரண்டாவது குழந்தை பிறந்தது. இரண்டு குழந்தைகளுக்கும் என் அம்மா தான்

செலவு செய்தார். இரண்டாவது குழந்தைக்கு 1 ½ வயது ஆகும் வரை எங்கள் வீட்டில் தான் இருந்தது.

03. என் அக்காவின் கணவர் நிறைய பேரை அழைத்து வந்து குழந்தைகளை அழைத்து சென்றுவிட்டார். என் அக்காவை திருமணம் செய்து கொடுத்து நாங்களும் கஷ்டத்தை அனுபவித்து கொண்டு இருக்கிறோம். அடிக்கடி பிரச்சனை செய்ததால் நாங்கள் ஊரை விட்டு வந்துவிட்டோம். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**1,2,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை இல்லை என்று பிரதிநிதிதுவம் செய்ததை பதிவு செய்யப்பட்டது.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-...

Judicial Magistrate

Additional Mahila Court,

Perambalur.